செய்தி வெளியீடு எண்:484 நாள் :12.09.2013

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ்ச் சுவடியியல் பட்டயவகுப்பு தொடக்க விழா**

சென்னை தரமணியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பின் தொடக்க விழா இன்று (12.09.2013) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் முனைவர் மூ.இராசாராம், இ.ஆ.ப. அவர்கள் சுவடிக் கண்காட்சியையும் தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயவகுப்பை தொடங்கி வைத்து பின்வருமாறு சிறப்புரையாற்றினார்:

“உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்று வந்த தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பு பின்னர் நிறுத்தப்பட்டது. இப்பட்டய வகுப்பு சில ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ் வளர்ச்சிக்காக அயராது பாடுபடும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய ஆட்சியில் மீண்டும் துவங்கியிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது .

‘தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்’ என பைபிளில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ் வளர்ச்சிக்குத் தட்டாமலேயும், கேட்காமலேயும் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். ஓலைச்சுவடிகளை ஆய்ந்து பதிப்பித்த மூதறிஞர் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்களை கௌரவிக்கும் வகையில் அவர் சிலைக்கு மாலையணிவித்து, அவர் பெயரில் விருதினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து சிறப்பித்துள்ளார். இதுபோன்று பல்வேறு விருதுகள் மூலம் மேலும் மேலும் பல தமிழறிஞர்களை சிறப்பித்து வருகிறார் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

தமிழின் தொன்மை, அதன் பாரம்பரியம் சுமார் 11,000 ஆண்டுகளுக்கு முந்தையதாகும். அப்பாரம்பரியப் பெருமைமிகு தமிழை உலகறியச் செய்து, அதன் சிறப்பினை பறைச்சாற்றுவதற்கு கல்கத்தாவில் உள்ள சாந்திநிகேதன் போன்ற உயர்கல்வி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டும். சாந்தி நிகேதன் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஓலைச் சுவடிகள் அதிக அளவில் உள்ளன. அச்சுவடிகளை தமிழாய்வாளர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு நூலாக வெளியிட வேண்டும். வட தமிழகப் பகுதிகளில் கிடைக்கின்றச் சுவடிகளை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும், தென் தமிழகப் பகுதிகளில் கிடைக்கின்றச் சுவடிகளை மதுரை

உலகத் தமிழ்ச்சங்கத்திற்கும் வழங்கவேண்டும் என்று தமிழறிஞர்களையும், சுவடிகளைப் பாதுகாத்துவரும் தமிழ் ஆர்வலர்களையும் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு சுவடிகளை வழங்குபவர்களை தமிழக அரசு சிறப்பிக்கும்."

இவ்விழாவிற்கு வாழ்த்துரை வழங்கிய மகாவித்துவான் மயிலம் தமிழறிஞர் வே.சிவசுப்பிரமணியன் அவர்கள் ஓலைச்சுவடிகளை சேகரித்து, அதைப் பதிப்பிப்பதும், கற்பிப்பதும் மிகவும் கடினமானப் பணி என்ற போதிலும் அதைப் பதிப்பித்த பிறகு அதில் கிடைக்கின்ற மகிழ்ச்சி, அடைந்த அனைத்துச் சிரமத்தையும் மறையச் செய்துவிடும் என்றும் குறிப்பிட்டு, இச்சிறந்த முயற்சியின் விளைவாக ஏற்பட்டுள்ள பட்டய வகுப்பினை தகுந்த முறையில் மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

முன்னதாக இப்பட்டயவகுப்பு – தொடக்க விழாவிற்கு முனைவர் அ. சதீஷ் அவர்கள் அனைவரையும் வரவேற்று அறிமுகவுரை நிகழ்த்தினார். தொடர்ந்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன் அவர்கள் தலைமையுரை ஆற்றி இவ்விழாவினை சிறப்பித்தார். நிறைவாக முனைவர் சு. தாமரைப்பாண்டியன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

வெளியீடு:

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**